# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆடி 24 | வெள்ளிக்கிழமை | 09.08.2024 | கதிர் 326







# அரியநேத்திரன் குறித்து ஞாயிறன்று தமிழரசு கட்சி மத்திய குழு ஆராயும்

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகப் போட்டியிடவுள்ள தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் அரியநேத்திரன் தொடர்பில் எதிர்வரும் 11 ஆம் திகதி ஆராயந்து முடிவெடுக்கப்படும் என தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தமிழரசுக் கட்சியானது இதுவரை எவ்வித முடிவுகளையும் மேற்கொள்ள முன்னர் அக்கட்சியின் மத்தியகுழு உறுப்பினரான அரியநேந்திரன் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக போட்டியிடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள விடயம் தொடர்பில் தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவை இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 11ஆம் திகதி கட்சியின் மத்திய குழு கூடி ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடி முடிவுகளை மேற்கொள்ளவுள்ளது. அதன் பின்னரே கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் அறிவிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதேவேளை தமிழ்ப் பொது வேட்பாளராக அரியநேத்திரன் போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்ட பின்னர் மாவட்டபுரம் சென்ற அரியநேத்திரன் கட்சித் தலைவரான மாவை சேனாதிஜாவை சந்தித்துப் பேசியதுடன், அவரது ஆசீர்வாதத்தையும் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மக்கள் ஆணையை பெற்று கடந்த காலங்களில் என்ன செய்தீர்கள்?

### ஈ.பி.டி.பியின் ஊடக பேச்சாளர் ரங்கேஸ்வரன் கேள்வி




அடுத்த நாடாளுமன்ற தேர்தலை நாடிபிடித்துப் பார்ப்பதுதான் தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பு என கூறிக் கொள்ளும் உதிரிகளின் எண்ணப்பாடே தவிர தாங்கள் குறிப்பிடுவது போன்று இது தமிழ் தேசியத்துக்கான குறியீடோ, அடையாளமோ அல்ல என்பதே யதார்த்தம். இதனை தமிழ் மக்கள் நன்கு விளங்கிக்கொண்டுள்ளார்கள் என்று என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் இன்றையதினம் நடைபெற்ற ஊடக சந்திப பின்போது கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு சுட்டிக்காட்டிய அவர் மேலும் கூறுகையில் –

‘கடந்த காலங்களில் மக்களின் ஆணையை பெற்று என்ன செய்தீர்கள்? 1977 மற்றும் 2004 ஆம் ஆண்டு மக்கள் சக்தியை காட்டியதாக

பெரு மைப்படுவதில் பயனில்லை.

1977 ஆம் ஆண்டும் மக்கள் ஆணையை வழங்கினார்கள். ஆயினும் அவர்களை அவலத்தில் தள்ளிவிட்டதை தவிர வேறெதனையும் சாதித்ததில்லை. பின்னர் 2004 ஆம் ஆண்டு 22 ஆசனங்களை எவ்வாறு பெற்றீர்கள் என்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தங்களுக்கு சாட்சியாக உள்ளார் என்பதையும் நாடே அறிந்திருந்தது.

அவ்வாறிருந்தும் முள்ளிவாய்க்கால் நோக்கி மக்கள் நகரும்போது 22 பேரும் என்ன செய்தீர்கள்? சர்வதேசம் ஊடாக குரல்கொடுத்தீர்களா? அல்லது மக்களைனத்தான் காப்பாற்றினீர்களா? எதுவும் இல்லை. நாட்டைவிட்டு ஓடி வெளிநாடகளில் பதுங்கி இருந்தீர்கள்.

இதேபோன்று வடக்கு – கிழக்கை .ஜே. வி.பி பிரிக்கும்போது 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும் என்ன செய்தீர்கள்? குறைந்தது நிதிமன்றத்தையாவது நாடினீர்களா? அதுவும் கிடையாது. 2005 இல் ரணில் விக்ரமசிங்கவை புலிகள் நிராகரித்தனர் என கூறுகின்றீர்கள். ஆனால் என்ன நடந்தது என்பதை வரலாறு கூறிச்சென்றது.

வடக்கு கிழக்கில் 1000 விகாரைகளை கட்ட அன்றைய புத்தசாசன அமைச்சின் ஊடாக சஜித் பிரேமதாச முயற்சிகளை மேற்கொண்டபோது 2

## தேர்தலில் சுயேச்சையாக களமிறங்கியது எதற்காக?

### விளக்கம் தருகிறார் ரணில்

மக்களின் பசி தீர்க்கவே ஜனாதிபதித் தேர்தலில் கட்சி வேறுபாடின்றி, சுயேட்சை வேட்பாளராக களமிறங்கியுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ‘பெண்கள் எங்கள் பலம்” என்ற பெண்கள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் ஆண்களுக்கு சமமாக, பெண்களின் உரிமைகள் வலுவூட்டப்பட்டு பாதுகாக்கப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.



## கொடியேற்றத்துடன் ஆரம்பமானது நல்லூர் கந்தன் மகோற்சவ பெருவிழா

வரலாற்று புகழ்பெற்ற யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இன்று பெருந்தொகையான பக்தர்கள் சூழ்ந்திருக்க பக்திப் பரவசத்துடன் கொடியேற்றம் இடம்பெற்றது.

இன்று காலை பத்து மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய மகோற்சவ பெருவிழா தொடர்ந்து 25 நாட்கள் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 18 ஆம் திகதி மஞ்சமும், 31ஆம் திகதி சப்பரமும், செப்டம்பர் மாதம் 1 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 2 ஆம் திகதி காலை தீர்த்த திருவிழாவும் மாலை கொடியிறக்கமும் நடைபெறும்.

அத்தோடு செப்டம்பர் மாதம் 3ஆம் திகதி பூங்காவனமும் செப்டம்பர் 4ஆம் திகதி வைரவர் உற்சவத்துடனும் மஹோற்சவம் நிறைவுக்கு வரும் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமைச்சு பதவிகளை இழக்கும் ரணிலின் முக்கிய 2 சகாக்கள்

### உயர் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு



சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மற்றும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோரை கட்சியிலிருந்து நீக்குவதற்கான ஐக்கிய மக்கள் சக்தியின் தீர்மானம் சட்டப்பூர்வமாக செல்லுபடியாகும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

விஜித் மலல்கொட, அச்சல வெங்கப்புலி மற்றும் அர்ஜ/ன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வில், மனுதாரர்கள் இருவரையும் கட்சியிலிருந்து நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எடுத்த தீர்மானம் சட்டப்படி செல்லுபடியாகும் என தீர்ப்பளிக்கப்பட்டது.

உயர் நீதிமன்றத் தீர்ப்பின் விளைவாக, ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டால் நாடாளுமன்ற உறுப்புரிமையையும் அமைச்சுப் பதவிகளையும் இழக்க நேரிடும்.

சுற்றுலா அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மற்றும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோர் ஐக்கிய மக்கள் தம்மை கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்கியதை எதிர்த்து இரண்டு தனித்தனியான 2

மாலைக்கதிர்
Maalaikkathir



**அமைச்சு....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியேற்ற மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த இருவரும் ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் நிலையில், அரசாங்கத்தில் இணைந்த நிலையில் ஐக்கிய மக்கள் சக்தி இந்த தீர்மானத்தினை எடுத்திருந்தது.

இதன்பின்னர் கட்சியில் இருந்து நீக்கி நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை தகுதி நீக்கம் செய்வதற்கான ஐக்கிய மக்கள் சக்தியின் இந்த தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தி மனுஷ நாணயக்கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் மனுதாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது கட்சி யாப்பின் பிரகாரம் அதன் உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது கட்சியின் செயற்குழுவிற்குரிய பொறுப்பு என்றும் இது கட்சித் தலைவருக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட ஒன்றல்ல என்றும் அமைச்சர் மனுஷ நாணயக்கார சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

எனவே சஜித் பிரேமதாசவின் இந்த தீர்மானம் கட்சியின் விதிகளின்படி அரசியலமைப்பிற்கு முரணானது எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

நீதியரசர்களான விஜித் மலல்கொட அச்சல வெங்கப்புலி மற்றும் அர்ஜ/ன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணை இடம்பெற்றதையடுத்து தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டிருந்தது. அந்த நிலையில் இன்று தீர்ப்பு வழங்கப்பட்டது

**மக்கள்....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தாங்கள் கொண்டவந்த நல்லாட்சி அரசு என மார்பு தட்டியவர்கள் யார்? முதுண்டு கொடுத்தவர்கள் யார்? நல்லாட்சி அரசின் காவலர்கள் என இறுமாப்பு கொண்டவர்கள் யார்? இவ்வாறு துதிபாடியும் 1000 விகாரைகள் திட்டத்தை தடுக்க முடியாது போனது ஏன்?

13 ஐ பற்றி ரணில் பேசுகின்றார் அதை தெற்கில் பேசுவாரா என நாமல் ராஜபக்ஷ கூறியதாக கருத்துச் சொல்லியுள்ளீர்கள்.

வடக்கு – கிழக்கு இரண்டு பகுதிகளாக உள்ளன. அதில் வடக்கில் மாகாண அரசை நடத்தியதன் இலட்சணத்தை மக்கள் மட்டுமல்லாது இந்த உலகமே நன்கறியும். அதேபோன்று திறமையில்லாதவர்கள் நிர்வாக ஞானம் இல்லாதவர்கள், திட்டமிடல், ஆற்றலின்மை, அக்கறையின்மை அதில் வெளிப்பட்டதையும் நன்கு அறியமுடிந்தது. குறுகிய நிர்வாக அலகான மாகாண சபை ஊடாக ஏதாவது மக்களுக்கு சாதித்தீர்களா?

கடந்த காலங்களில் இரண்டு தடவை மக்கள் ஆணை தந்தார்கள் என கூறிவருகின்றீர்கள். ஆனால் அதில் வரிச்சலுகை இல்லாத வாகனங்கள், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் பதவி மற்றும் சலுகைகள், மாவட்ட அபிவிருத்திக் குழு பிரதேச அபிவிருத்திக் குழு என பதவிகளையும் சலுகைகளையும் பெற்றீர்களே தவிர வாக்களித்த மக்களுக்கும் வாக்குறுதி வழங்கிய மக்களுக்கும் என்ன பெற்றுக்கொடுத்தீர்கள்?

புலிகளை பலவீனப்படுத்தி உடைத்தது என கூறிவருகின்றீர்கள். அதை ஏன் அரசிடம் எதிர்பார்க்கின்றீர்கள், ஆயுதப் போராட்டத்தை கையிலெடுத்த ஜே.விபியை தனது இனமென்றும் பாராமல் ஒழித்தது அரசாங்கம். அப்படி இருக்கும்போது புலிகளை பிரித்தார்கள் உடைத்தார்கள் என எதிர்பார்த்தது உங்களது தவறு. எந்த அரசாங்கமும் அவ்வாறுதான் சிந்திக்கும்

தமிழ் பொது வேட்பாளர் என்பதிலிருந்து “தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்” என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு தனது முகநூலில் குறிப்பிட்டுள்ளார். எனவே எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலை நாடிபிடித்துப் பார்ப்பதுதான் தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பு என கூறிக் கொள்ளும் உதிரிகளின் எண்ணப்பாடே தவிர தாங்கள் குறிப்பிடுவது போல இது தமிழ் தேசியத்துக்கான குறியீடோ, அடையாளமோ அல்ல என்பதே ஜதார்த்தம் இதனை தமிழ் மக்கள் நன்கு விளங்கிக்கொண்டுள்ளார்கள். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# முல்லைத்தீவு ஊடகவியலாளருக்கு விசாரணைக்கு வருமறு அழைப்பு

முல்லைத்தீவு மாவட்ட சுயாதீன ஊடகவியலாளர் சண்முகம் தவசீலனை மாங்குளம் காவல்துறையினர் விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை ஊடகவியலாளர் சண்முகம் தவசீலனின் வீட்டிற்குச் சென்ற காவல்துறையினர், ஊடகவியலாளர் வீட்டில் இல்லாத நிலையில் அவருக்கான அழைப்பு கடிதத்தினை குடும்பத்தாரிடம் வழங்கி சென்றுள்ளனர்.

எந்தவித காரணங்களும் குறிப்பிடாது உதவிப பொலிஸ் அத்தியட்சகரின் விசாரணைக்காக வாக்குமூலம் பதிவுசெய்ய இருப்பதனால் இன்று திகதி காலை 9 மணிக்கு மாங்குளம் காவல் நிலையத்தில் உதவிப்பொலிஸ் அத்தியட்சகரின் காரியாலயத்திற்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறேன் என குறித்த கடிதத்தில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# ஹரின் பொர்னாண்டோவின் இடத்துக்கு ஹிருணிக்கா?

ஹரின் பெர்னாண்டோவை ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து நீக்கியமை சட்டத்துக்கு உடன்பட்டது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்ததை அடுத்து தன்னுடைய அமைச்சுக்கு சென்ற சுற்றுலா, காணி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, ஊழியர்களுக்கு பிரியாவிடை கொடுத்துவிட்டு அமைச்சில் இருந்து, வெள்ளிக்கிழமை வெளியேறினார்.

இந்நிலையில், ஹரினின் பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்துக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திரவை நியமிக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# கட்டுப்பாடிழந்த மோட்டார் சைக்கிள் இளைஞன் பலி! 3 பேர் படுகாயம்!





கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனையிறவு சோதனைச்சாவடிக்கு முன்னால் இன்று வெள்ளிக்கிழமை காலை மோட்டார் சைக்கிளொன்று வேக கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசுவமடு ரெட்பாரா பகுதியில் இருந்து இருவர் மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போது வேகக் கட்டுப்பாட்டை இழந்து இராணுவத்தின் சோதனைச் சாவடியுடன் மோதி, எதிர் திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடனும் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசுவமடு ரெட்பாரா பகுதியைச் சேர்ந்த காந்தஷரூபன் கலையரசன் என்னும் 21வயது உடைய இளைஞனே உயிரிழந்துள்ளார்.

விபத்தில் மூன்று பேர் படுகாயம் அடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

# தவிசாளர் பதவியை துறந்தார் பொன்சேகா

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இராஜினாமா செய்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி. அலவத்துவல இதனை தெரிவித்துள்ளார்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக களமிறங்கியுள்ள நிலையில் அதற்கான கட்டுப்பணத்தையும் கடந்த 5 ஆம் திகதி அவர் செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# அரசியலமைப்பை மீறிய மைத்திரியின் குடியுரிமையை ரத்துச் செய்ய வேண்டும்

## வழக்கு தாக்கல் செய்ய சிவில் அமைப்புக்கள் திட்டம்

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் குடியுரிமையை இரத்து செய்யுமாறு கோரி சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள் குழுவொன்று வழக்குத் தாக்கல் செய்யத் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2018 இல் 52 நாள் அரசாங்கத்தை அமைத்த போது வேண்டுமென்றே அரசியலமைப்பை மீறிய குற்றச்சாட்டுடன் தொடர்புடையதாக இது அமைகிறது.

நிறைவேற்று அதிகாரத்தில் மிக உயர்ந்த அதிகாரம் கொண்ட ஜனாதிபதி, அரசியலமைப்பை நிலைநிறுத்துவதாக சத்தியப்பிரமாணம் செய்கிறார். அதன்படி, நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தின்படி செயற்படுவதே நிறைவேற்று ஜனாதிபதியின் முதல் பொறுப்பு. அவர் வேண்டுமென்றே அரசியலமைப்பை மீற முடியாது.

2018 இல், 52 நாள் அரசாங்கத்தை நிறுவிய பின்னர் மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தைக் கலைப்பதற்காக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை உச்ச நீதிமன்றம் செல்லுபடியாகாதது, இது அரசியலமைப்பை மீறுவதாகத் தீர்ப்பளித்தது. அதன்படி, அவர் வேண்டுமென்றே அரசியல் சாசனத்தை மீறியுள்ளார் என்பது உச்ச நீதிமன்ற தீர்ப்பின் மூலம் தெரிய வந்துள்ளது. எதிர்கால ஜனாதிபதிகளுக்கு முன்னுதாரணமாக அமையும் வகையில், மைத்திரிபால சிறிசேனவின் குடியுரிமைகளை வாழ்நாள் அல்லது குறிப்பிடத்தக்க காலத்திற்கு ரத்து செய்யுமாறு கோரிய மனுவொன்றை தாக்கல் செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மன்னார் வைத்தியசாலையில் தவறுகள் நடைபெற்றிருந்தால் நடவடிக்கை உறுதி



## சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவிப்பு

மன்னார் வைத்தியசாலையில் இடம்பெற்ற இளம் தாய் சிந்துஜாவின் மரணம்தொடர்பில்சுகாதார அமைச்சு விசேட கவனம் செலுத்தியுள்ளதாகவும், அந்த விடயத்தில் ஏதாவது தவறுகள் நடந்திருந்தால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற மருத்துவ திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், மன்னார் வைத்தியசாலையில் இடம்பெற்ற மரியராஜ் சிந்துஜாவின் மரணம் தொடர்பில் முன்வைத்த விடயங்கள் குறித்து பதிலளிக்கையிலேயே சுகாதார அமைச்சர் இவ்வாறு கூறினார்.

சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண மேலும் தெரிவிக்கையில், இந்த விடயம் தொடர்பில் விசேட அவதானம்செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

இது தொடர்பான விசாரணை அறிக்கையை தான் இன்னும் பார்க்கவில்லை என்று குறிப்பிட்டார்.

இந்த விடயத்தில் ஏதாவது தவறுகள் நடந்திருந்தால் அது தொடர்பில் நிச்சயமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், நாட்டில் நோயாளர்களை பாதுகாப்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அதற்காகவே சட்டமூலமொன்றையும் முன்வைத்துள்ளதாகவும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.




# பாசிப் பயறு பயிர்ச்செய்கை வேலைத் திட்டம் ஆரம்பம்



சம்மாந்துறை பிரதேசத்தின் பின்தங்கிய கிராம புறங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக விவசாய அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பாசிப் பயறு பயிர்ச்செய்கை வேலை திட்டம் சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வானது கல்லைரச்சல் -2 கிராம சேவகர் பிரிவில் மயில் ஓடை வட்டையில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முகம்மது ஹனீபா தலைமையில் இடம் பெற்றது.

இன் நிகழ்விற்கு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய விரிவாக்கல் நிலைய பொறுப்பதிகாரிகள் (சம்மாந்துறை, மல்வத்தை) விவசாய போதனாசிரியர்,(மத்தி, மாகாணம்) பிரதேச செயலக விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# மூன்றாவது தடவையாகவும் சம்பியனானது கல்முனை ஸாஹிரா



(அஸ்ஹர் இப்றாஹிம)

மட்டக்களப்பு வெபர் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான தைகொண்டோ சுற்றுப்போட்டியில் (ருயளவநசளீசழளைஉந ஐவெநச ளுஉாழழட வுயநமறழனெழ ஊாயஅிழைளொனி) கல்முனை ஸாஹிறா தேசியக் கல்லூரி வீரர்கள் மிகவும் சிறப்பாக விளையாடி 2022ம் ஆண்டு இக் கல்லூரி ஏற்படுத்தியிருந்த சாதனையை (41 புள்ளிகள்) கடந்த 2023ம் ஆண்டு முறியடித்து (42 புள்ளிகள்) மீண்டும் இவ்வருடம் 2024ம் ஆண்டு முறியடித்து ஆண்களுக்கான முழுநிலை சம்பியன்களாக (48 புள்ளிகள்) ஆக தெரிவு செய்யப்பட்டு வரலாற்று சாதனை படைத்துள்ளனர்.

இதில் 7 தங்கம், 6 வெள்ளி, 6 வெண்கலம் அடங்களாக மொத்தம் 19 பதக்கங்களை பெற்றுள்தோடு, .13 வீரர்கள் தேசிய போட்டிக்கும் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ் அடைவிற்காக உறுதுணையாய் இருந்து மாணவர்களின் தேவைகளை பூர்த்தி செய்து ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி போட்டி நடைபெற்ற அரங்கிற்கே வருகை தந்து ஊக்கப்படுத்திய கல்லூரி முதல்வர் எம்.ஐ.ஜாபிர் அவர்களும் இணைப்பாடவிதானத்திற்குப் பொறுப்பான பிரதி அதிபர் ஏ.எல்.எம்.தன்ஸீல், பிரதி அதிபர்கள் , உதவி அதிபர்கள், மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கி நெறிப்படுத்திய பாடசாலையின் ஆசிரியர் மற்றும் பிரதம பயிற்றுவிப்பாளர் யூ.ஏல்.எம்.இப்றாஹிம், மற்றும் உதவி பயிற்றுவிப்பாளர்கள் ஜே.ஏ.சும்ட், ஏ.ஏ.ஹமீம் ஏ.ஏ.ஹம்தான் , ஏ.பீ.ஏ.சிஹாப் மற்றும் போட்டிகளில் பங்கேற்று தமது உச்ச திறமைகளை வெளிக்காட்டிய மாணவர்களுக்கும் கல்வி சமூகம் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளது.

# திணைக்களம் வெற்றி பெற்று சம்பியன்களாக தெரிவு



இலங்கையிலுள்ள அரச சேவை திணைக்களங்களுக்கிடையில் மகர சிறைச்சாலை மைதானத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கிறிக்கட் சுற்றுப் போட்டியில் இலங்கை தபால் திணைக்களம் 30 ஓட்டங்களினால் வெற்றியீட்டி 2024 ஆம் ஆண்டுக்கான சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கை தபால் திணைக்களத்திற்கும்,இலங்கை மின்சார சபைக்கும் இடையிலான இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பாடிய இலங்கை தபால் திணைக்கள அணியினர் குறித்த ஓவரில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை மின்சார சபை அணியினர் சகல விக்கட்டுக்களையும் இழந்து 83 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டனர்.

இலங்கை தபால் திணைக்களத்தின் வெற்றிக்கு காரணமான சகலருக்கும் இலங்கை தபால் திணைக்கள விளையாட்டுக் கழக தலைவர் தம்மிக்க ஏக்கநாயக வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.




# புத்தளம் முஸ்லிம் மகா வித்தியாலய கரப்பந்தாட்ட அணி சம்பியனானது



புத்தளம் வலைய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான 20 வயதுக்குட்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் புத்தளம், திகழி முஸ்லிம் மகா வித்தியாலய அணி முதலாம் இடத்தைப் பெற்று மாகாண மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பயிற்சி மற்றும் வழிகாட்டல் வழங்கிய உடற்கல்வி ஆசிரியர் ஏ.எம்.பாரிஸ், உடற்கல்வி பயிற்சியாளர் எம்.என்.எம் டில்ராஸ் மற்றும் பழைய மாணவர்கள் ஆகியோருக்கு பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.ஏ.றஸாக் உள்ளிட்ட கல்வி சமூகம் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

# கிழக்கின் சுற்றுலா மையம் பயிற்சி திட்டம் ஆரம்பம்





(நூருல் ஹுதா உமர்)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களின் சிந்தனையில் கிழக்கிலங்கையில் வசிக்கின்ற சுற்றுலாத்துறையில் ஆர்வமிக்க இளைஞர் யுவதிகளுக்கு "கிழக்கின் சுற்றுலா மையம்" இப்பயிற்சி திட்டமானது மட்டக்களப்பு யீயுஓ ஊயுஆீருளு-டுயபெரயபந ரூ ஏழஉயவழையெட வுசயலைைெபெ ஊநவெநச ஏற்பாட்டில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக ஜனாதிபதி யின் செயற்குழு தலைவரும் "கிழக்கின் சுற்றுலா மையம்" இந்த கருப்பொருளை ஜனாதிபதி மட்டத்திற்கு எடுத்துச்சென்ற வரும் சமூக ஆர்வலருமான மோகன் கணபதிப்பிள்ளை பங்குபற்றி இருந்தார்.

நிகழ்ச்சித்திட்டத்தில் 150க்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள் பங்குபற்றி இருந்ததுடன் அவர்களுக்கான விரிவுரைகள் அனுபவமும் தேர்ச்சியும் மிக்க விரிவுரையாளர்களை கொண்டு நடத்தப்பட்டது.

கிழக்கின் சுற்றுலா மையம் செயற்றிட்டமானது யீயுஓ ஊயுஆீருளு-டுயபெரயபந ரூ ஏழஉயவழையெட வுசயலைைெபெ ஊநவெநச இல் இலவசமாக செயல்படுத்தப்படுகிறது. இந்நிகழ்ச்சி திட்டமானது கிழக்கிலங்கையின் சுற்றுலா துறை முன்னேற்றம் மற்றும் அந்நிய செலாவனியை அதிகரிக்க வழிவகுப்பதோடு அவர்களின் தொழில் மற்றும் வருமானத்தை அதிகரிக்க செய்வதையும் தொழில் அங்கத்துவத்தை வழங்குவதையும் பிரதான நோக்கமாக கொண்டுள்ளது.

இப்பயிற்சி நெறி முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படுவதுடன் கிழக்கின் சுற்றுலா மையம் சுற்றுலா வழிகாட்டிக்கான உத்தியோகபூர்வ அடையாள அட்டை வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அறுவடை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் மழை கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் பாதிப்பு



கிளிநொச்சி மாவட்டத்தின் மிகப்பெரிய குளமாகிய இரணைமடுக்குளத்தின் கீழான 15650 ஏக்கர் நிலப்பரப்பில் 2024ம் ஆண்டு சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் தற்போது அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். நேற்று பெய்த திடீர் மழை காரணமாக காயவிடப்பாட்டிருந்த நெல்கள் மழையில் நனைந்துள்ளன.



# கலைமகளில் நடைபெற்ற திறன் வகுப்பறைத் திறப்பு விழா





(வி.ரி. சகாதேவராஜா)

நவீன கற்பித்தல் முறையை ஊக்குவிக்கும் நோக்கில் சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட வேப்பையடி கலைமகள் மகா வித்தியாலயத்தில் மனிதநேயம் நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையில் விஞ்ஞான ஒன்றியம் மட்டு அம்பாறை அமைப்பின் ஒருங்கிணைப்பில் 1.1 மில்லியன் பெறுமதியான திறன் வகுப்பறை நேற்று வியாழக்கிழமை அதிபர் எஸ்.தியாகராஜா தலைமையில் நடைபெற்றது.

அமரர் கலாநிதி சுதன் சுதர்சன் நினைவாக சுமதி சுதர்சன், ஷோபனா சுதர்ஷன், நீலன் சுதர்சன் அவர்களின் நிதியுதவியில் (1,163,150 ஷரூபா) இந்திறன் வகுப்பறை மனிதநேய அறக்கட்டளை ஸ்தாபக தலைவர் கை.அரவிந்தனின் ஏற்பாட்டில் திறந்து வைக்கப்பட்டது.

அதிதிகளாக மனிதநேய அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளர்களான ஆர். சிரஞ்சீவி, திருமதி சாந்தி சிரஞ்சீவி , உதவிக் கல்விப் பணிப்பாளர் வீ.ரி. சகாதேவராஜா, மற்றும் அம்பாறை விஞ்ஞான ஒன்றிய ஸ்தாபக தலைவர் தி.கோபிநாத், இணைப்பாளர் வ.யதுர்சன் ,ஆசிரிய ஆலோசர்களான பி. மோகன் , கே. சந்திரகுமார் உள்ளிட்டவர் கலந்து சிறப்பித்தனர்.

பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் கே. மதிவண்ணன் பழைய மாணவர் மன்ற தலைவர் லோஷனன் விஞ்ஞான ஒன்றிய உறுப்பினர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மனித நேயம் அமைப்பின் இச் சேவையை பாராட்டி பாடசாலை சமூகத்தினால் திரு. திருமதி சிரஞ்ஜீவி தம்பதியினர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் விஞ்ஞான ஒன்றியம் மட்டு அம்பாறை அமைப்பினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.







## முருங்கை செய்கையாளர் கடுமையாகப் பாதிப்பு



கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பிரமந்தநாறு மயில்வானபுரம் பகுதியில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் தமது வாழ்வாதாரமாக முருங்கைச் செய்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட முருங்கைக்காய் தற்பொழுது 40 ரூபாய் 50 ரூபாய்க்கு என கொள்ளளவு செய்யப்படுவதாகவும் தற்பொழுது முருங்கை செய்கையின் அனேகமான விவசாயிகள் தற்பொழு முருங்கை செய்கை அறுவடையில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் முருங்கைக்காய்க்கு உரிய விலையின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடமும் இதே போன்றும் முருங்கை செய்கையாளர்கள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதாகவும் குரங்கு காவள் யணைக்காவல் என இரவுபகல் என பாடுபட்டு எந்தப்பயனுமற்றுப்போயுள்ளதாவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

அதே போன்று இந்த வருடமும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளதாகவும், அறுவடைக்கு தயாராக உள்ள முருங்கை காய்களை அறுவடை செய்ய முடியாது கைவிடும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

அறுவடை செய்யும் பொழுது அதற்கான கூலி பணத்தை கூட பெற முடியாத நிலையில் முருங்கச் செய்கிறாளர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தமது பகுதியில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் முருங்கைச் செய்கையினை மேற்கொண்டு வருவதாகவும் அரசாங்கத்தினால் தமக்கு உரிய விலையினை பெற்றுத்தர வேண்டும் எனவும், அப்படி பெற்றுத் தர முன்வராத பட்சத்தில் தாம் முருங்கச் செய்கையில் இருந்து முற்று முழுதாக விடுபட வேண்டிய நிலை ஏற்படும் எனவும் முருங்கை செய்கையாளர்கள் தெரிவித்துள்ளார்.

எனவே சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகள் எமது பகுதியில் உள்ள முருங்கைச் செய்கையாளரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் எமது பகுதி விவசாயிகளுக்கு உரிய விலையினை பெற்று தர வேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளார்.




## தபால் மூல வாக்களிப்பு இன்று நள்ளிரவு வரை விண்ணப்பிக்க முடியும்

ஜனாதிபதித் தேர்தல் அஞ்சல் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான, கால அவகாசம் இன்று நள்ளிரவுடன் நிறைவடையவுள்ளது.

கடந்த 5ஆம் திகதியுடன் அஞ்சல் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிக்கும் காலம் நிறைவடையவிருந்த நிலையில், அது இன்று நள்ளிரவு வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், உரிய காலப பகுதிக்குள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதேநேரம், எந்தவொரு காரணத்திற்காகவும் அஞ்சல் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பக் காலம் மீண்டும் நீடிக்கப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு கிழக்கு பகுதியில் கன மழைக்கு வாய்ப்பு

நாளை சனிக்கிழமை நண்பகலுக்கு பின்னர் இலங்கையின் தென்கரையோரத்தை அண்மித்த வங்காள விரிகுடாவில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியாற் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

“இதனால் எதிர்வரும் 11.08.2024 முதல் 17.08.2024 வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. அதேவேளை தற்போது வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் கிடைக்கும் மேற்காவுகை மழை எதிர்வரும் 11.08.2024 வரை தொடரும் வாய்ப்புள்ளது” என்றும் அவர் தெரிவித்துள்ளார்

## பயிற்றப்பட்ட ஆசிரியர் சான்றிதழ் வழங்கும் விழா

கோப்பாய் ஆசிரியர் கலா சாலையில் பயிற்சி பெற்று பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட தேர்வில் சித்தியடைந்த ஆசிரியர்களுக்கான பயிற்சிச் சான்றிதழ் வழங்கும் விழா நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கும் 11.30 மணிக்கும் என இரண்டு அமர்வுகளாக கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இசுருபாய கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் தி. யோன் குயின்ரஸ் கலந்து கொள்வார்.

இநநிகழ்வில் 238 ஆசிரியர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்குரிய தகைமைப் பத்திரங்களைப் பெறவுள்ளதாக கலாசாலை அதிபர் தெரிவித்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.08.2024இல் வெளியிடப்பெற்றது.